# ஒரு வழியாக, தேர்தல் வந்தது!

## எதிர்வரும் தேர்தல் 2024 தொடர்பில் பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத கூட்டமைப்பு, இலங்கை விடுத்துள்ள அறிக்கை

2022ஆம் ஆண்டு இலங்கை அதன் வங்குரோத்து நிலையினை அறிவித்தது முதல் கடந்த இரண்டு வருடங்களாகப் பாரிய பொருளாதார நெருக்கடியினாலும் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாக பலவீனப்படுத்தும் சிக்கன நடவடிக்கைகளினாலும் உருவாக்கப்பட்ட கடினமான நிலைமைகளின் கீழ் நாம் வாழ்ந்து வருகின்றோம். இக்காலகட்டத்தில், பெண்களதும் உழைக்கும் மக்களதும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட சமுதாயங்களினதும் வாழ்க்கை நிலைமைகள் படிப்படியாக மோசமடைந்துள்ளன.

கடுமையான சம்பளக் கெடுபிடிகளுக்கும் தொழில்வாய்ப்பின்மைக்கும் மத்தியில் குடும்பங்கள், நாளொன்றுக்கு ஒரு வேளை உணவுடன் அல்லாடிக்கொண்டு, மருந்துக்கும் கல்விக்கும் அடிப்படைப் பயன்பாடுகளுக்கும் போதிய பணம் இல்லாமல் தொடர்ந்து போராடிவருகின்றனர். இலங்கையின் உணவு முறைமைக்குக் கணிசமான பங்களிப்பினை வழங்கும் சிறு உற்பத்தியாளர்கள், அதிகரித்துள்ள எரிபொருள் செலவிற்கும் உரச் செலவிற்கும் இனிமேலும் ஈடுகொடுக்க முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர். நம்பிக்கையற்றுப்போன நிலையில் வெளிநாடுகளில் வேலை தேடிச் செல்வதற்குப் பலரும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு செல்லாது எஞ்சியுள்ளவர்கள் தம் வாழ்வினைக் கடத்த கடன்களுக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

### அரசாங்கம் அதன் மக்களைக் கைவிட்டுள்ளது

இலங்கை மக்களின் துயரங்களைப் பற்றி அக்கறையற்ற விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கம், “பொருளாதார ஸ்திரத்தன்மை,” “கசப்பானமருந்து” எனும் போலிக் கூற்றுரையினை போற்றித்தள்ளி, அரசியல் மேட்டுக்குடியினரதும் சிந்தனைச் செம்மல்களினதும் மற்றும் நகர்வாழ் வியாபாரச் சமுதாயங்களினதும் ஆசீர்வாதத்துடன் பொருளாதார மீட்புத் திட்டத்தினை அமுல்ப்படுத்தினாலும், அது உண்மையில் சாமாண்ய மக்களின் வாழ்வினை வலுவற்றதாக்கிப் புரட்டிப் போட்டுவிட்டது.

இரட்டிப்பாகியுள்ள வறுமை வீதங்களும், அச்சமூட்டும் விதத்தில் அதிகரித்துள்ள உணவுப் பாதுகாப்பின்மையும், மேலும் சிறார்கள் மத்தியில் அதிகரித்துள்ள வளர்ச்சிக்குன்றல், மெலிவடைதல், போஷாக்கின்மை மட்டங்களும் இலங்கையின் எதிர்காலச் சந்ததிகளின் பிணி சூழ் வாழ்வுக்கே பங்களித்துவருகின்றன. கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கங்களினாலும் (2020), அரைவேக்காட்டுத் தனமாக அமுல்படுத்தப்பட்ட உரக் கொள்கையினாலும் (2021), பொருளாதார நெருக்கடியினாலும் (2022), ஏற்கனவே நலிவடைந்து கடுமையாகப் பலவீனமடைந்துள்ள நாட்டின் உணவு முறைமையினை மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

புலம்பெயர் தொழிலாளர்களாலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களாலும் சுதந்திர வர்த்தக வலயங்களில் உழைக்கும் தொழிலாளர்களாலும் ஈட்டப்பட்டு அதிகரித்துவரும் அந்நியச் செலாவணி தொடர்பாக அரசாங்கம் வெட்கமின்றிக் கொக்கரித்தது. இவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த டொலர்கள் நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பின் ஸ்திரநிலையினைப் பேணுவதற்கும் அரச படுகடன்களை அடைப்பதற்கும் வாகன இறக்குமதிகள் உள்ளிட்ட பகட்டான நுகர்விற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், தொழிலாளர்கள் பாதுகாப்பாகப் பணியாற்றுவதற்கான நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் குடும்பங்களின் நலனோம்பலை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் தவறிவிட்டது.

தீங்குமிக்க தொழிற் சட்டங்களை முன்மொழிந்தும், உள்நாட்டுக் கடன் மீள்கட்டமைப்பாக்கம் என்ற பெயரில் ஊழியர்களின் சேமிப்பினை வெட்டித்தள்ளியும் உழைக்கும் மக்களின் உரிமைகள் மீதும் பாதுகாப்பின் மீதும் நேரடித் தாக்குதல் நடத்துவதற்காகக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. குறைந்தபட்ச ஊதியத்தில் அதிகரிப்புக் கோரிய தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையினை வைத்துக்கொண்டு அவர்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிய அரசாங்கம், இவர்கள் உட்பட ஏனைய துறைகளில் உள்ளவர்களுக்கும் வாழ்வதற்குப் போதியதான ஊதியத்தினை உறுதிப்படுத்தத் தவறிவிட்டது.

மேலும், மகளிர் குழுக்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள், மற்றும் முன்னணிப் பொருளியலாளர்கள் விடுத்த பல எச்சரிக்கைகளையும் புறக்கணித்து, 'அசுவெசும' என்ற பெயரில் அரசாங்கம் ஓர் அவலமான சமூகப் பாதுகாப்புவலைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அதிகமான இலங்கையர்கள் சார்ந்துள்ள விரிவான இலவசச் சுகாதாரச் சேவை முறைமை மற்றும் இலவசக் கல்வி முறைமை ஆகியன சிக்கன நடவடிக்கைகளாலும், தனியார்மயமாக்குவதற்கான திட்டங்களாலும் சீர்குலைக்கப்பட்டன.

பொது ஏரிசக்தித் துறையினைத் தனியார்மயப்படுத்துகையில் நாட்டின் மிகவும் வனப்பும் நுண்மையும் கொண்ட சுற்றுச்சூழல் கூட விட்டுவைக்கப்படவில்லை. பல்வகைமைமிக்கவையும் அழிவுக்குள்ளாகும் ஆபத்திலுள்ளவையுமான பறவை இனங்களின் வலசைப் பாதைகள், வெளிநாட்டு வியாபாரங்களின் இலாபமீட்டலுக்காக வடிவமைக்கப்பபட்ட காற்றாலைகளின் பாதைகளுடன் குறுக்கறுக்கும் வகையில் வழிவமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையர்களுக்கான பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிய இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத்தியில், வெளிநாட்டுக்கடன் வழங்குனர்களுடன் அரசாங்கம் கடன் மறு சீரமைப்பு ஏற்பாடொன்றுக்கான பேச்சுவார்த்தையினை நடத்தியுள்ளது. இது நிலையுறுதியற்றது என்பதுடன் நாட்டினை மேலும் கடனுக்குள் தள்ளி மற்றொரு பொருளாதார நெருக்கடிக்கே வழியமைக்கும். தற்போதைய அரசாங்கத்தின் கீழ் உள்நாட்டு ஆதிக்க வர்க்கத்தின்நலன்கள், சர்வதேசக்கடன்வழங்குனர்களதும் பெருஞ்செல்வந்தர்களதும் நலன்களுடன் இவ்வளவு அப்பட்டமாக ஒன்றினைந்தமையினை நாம் வேறு ஒருபோதும் கண்டதில்லை.

## சனநாயகத்தின் மீதான தாக்குதல்கள்

பொருளாதார நெருக்கடியின் மூல காரணங்களை அகற்றி, பெண்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட சமுதாயங்களுக்கும் நலனோம்பலை உறுதிப்படுத்துவதற்கு விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கம் மோசமாகத் தவறியமைக்கு, அதன் தலைமைத்துவத்தின் கீழ் சனநாயகத்தினை பலவீனமாக்கியமையும் காரணமாகும்.

பொருளாதாரக் கொள்கைவகுத்தலிலிருந்து அரசாங்கம் மக்களை விலக்கிவைத்து, அவர்களின் குரல்களைச் செவிமடுப்பதற்கு மறுத்து, கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தல் உள்ளடங்கலாக அச்சுறுத்தலின் மூலமும் கருத்துவேறுபாடுகளை நசுக்கியது. சிவில் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் எண்ணற்ற சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றி, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளைச் சட்டமாகப் பொதியவைத்து, இலங்கையர்கள் அவர்களின் சொந்தப் பொருளாதார எதிர்காலங்களை அவர்களே தீர்மானிப்பதற்கான உரிமைகளைத் துண்டித்தது. அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களையும் பிற்போட்டது. மேலும், எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை முடக்குவதற்கும் பல முயற்சிகளை மேற்கொண்டது.

இச்சூழமைவில், சனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு இப்பொழுதாவது வெளியிடப்பட்டுள்ளமை எம்மை ஆசுவாசப்படுத்துகின்றது. இலங்கையர்கள் மக்கள் அனுபவிக்கும் யதார்த்தங்களை நெருங்கியுணரக்கூடியதொரு தலைமைத்துவத்திற்கான அவர்களின் விருப்பங்களை சனநாயக ரீதியில் வெளிப்படுத்துவதற்கான ஒரு சூழல் உருவாகுவது அவசியமானதென நம்புகின்றோம். தாமதங்களின்றிப் பாராளுமன்றத்

தேர்தலையும், உள்ளூராட்சித் தேர்தலையும் நடத்துதல் உள்ளடங்கலாகச் சகல மட்டங்களிலும் சனநாயக ஆளுகை நிறுவப்படுதலும் முக்கியமானதாகும்.

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளும் திட்டங்களும் அரகலயவினாலும் ஏனைய மக்கள் இயக்கங்களினாலும் கோரிக்கை விடுக்கப்பட்ட கட்டமைப்பு மாற்றம் எனும் அர்த்தபூர்வமான மாற்றத்தினைப் பிரதிபலிக்கவில்லை என்பதையும் நாம் கவனத்திற்கொள்கின்றோம். எனவே, கடந்தகால முறைமைகள் இனியும் தொடர்வதைத் திட்டவட்டமாக நிறுத்தி, அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்குப் புதியதொரு தொலைநோக்கினை நோக்கி நடைபோடுவதற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

**எமது வாக்குகள் பொருளதார நீதியினைத் தாபிப்பதற்கான ஒரு கடப்பாட்டிற்கே!**

புதிய அரசாங்கம் பின்வருவனவற்றினைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்:

1. வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்! உள்நாட்டுப் பொருளாதாரத்தினை மீட்டெடுத்துத் தொழில்களை உருவாக்குதல்!
2. உடனடியாக பசியினையும் போசாக்கின்மையினையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்! இலங்கையின் உணவு முறைமையினைப் பாதுகாப்பதில் முதலீடு செய்தல்.
3. கடனில் சார்ந்திருத்தலில் இருந்தும் நகர்ந்து செல்வதற்காகத் தெளிவான திட்டங்களைச் சமர்ப்பித்தல்! இனிமேலும் சிக்கன நடவடிக்கைகள் வேண்டாம்! சர்வதேச நாணய நிதியத்தினை இனிமேலும் சார்ந்திருத்தல் வேண்டாம்!
4. அரச சேவைகளுக்கான நிதிகளை வெட்டுவதை நிறுத்துதல்! அரசாங்கச் சொத்துக்களைத் தனியார்மயமாக்குவதை நிறுத்துதல்!
5. கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவை மீதான செலவினத்திற்கான தெளிவான திட்டத்துடன் முற்போக்கான வரிவிதிப்பின் மூலமும் செல்வ வரிகள் மூலமும் வருமானங்களை அதிகரித்தல்!
6. அனைவருக்குமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் சம்பளமற்ற பராமரிப்புப் பணிகளுக்கும் பெண்கள் வழங்கும் பங்களிப்பினை அங்கீகரித்தல்!
7. உழைக்கும் மக்களின் உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் துண்டிக்கின்ற மற்றும் மக்கள் அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் சூழியல் எதிர்காலங்கள் தொடர்பில் தீர்மானம் வகுக்கும் இறைமையினைக் கட்டுப்படுத்துகின்ற சட்டங்களை நீக்குதல்!
8. சகல சமுதாயங்களினதும் பொருளாதார விருத்திக்கும் சமூக விருத்திக்கும் முட்டுக்கட்டையாக இருக்கும் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்த்தல்! தமது இனத்துவம், மதம், சாதி, பால்நிலை, மற்றும் பாலியல்பு காரணமாக ஒதுக்கப்பட்டிருக்கும் சமுதாயங்ககளைப் பாதுகாப்பதற்கும் தடைகளை அகற்றுவதற்கும் நிறுவனங்களையும் சட்டங்களையும் பொறிமுறைகளையும் அறிமுகப்படுத்தல்
9. சட்டமியற்றல் உள்ளடங்கலாக, கடன் மீள்கொடுப்பனவுகள், மற்றும் பொருளாதார மீட்புத் திட்டம் மீதான சனநாயகத் தீர்மானம்வகுத்தலின் சகல கட்டங்களிலும் பெண்கள் உள்ளிட்ட மக்களின் பங்கேற்பினை உறுதிப்படுத்தல்!
10. உலகளாவிய பொருளாதார ஆளுகையில் மாற்றத்திற்காக அழுத்தம் கொடுப்பதற்காக உலகளாவிய தெற்கின் கடன் நீதி இயக்கத்தில் இணைதல்! எமது நாட்டின் எதிர்கால சந்ததிகள் தொடர்ந்தும் கடனைச் செலுத்துவதில் இருந்தும் பாதுகாத்தல்.

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமம் என்பது பெண்ணிலைவாத பொருளியலாளர்கள், அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என நாடு முழுவதுமிருந்து இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியுடன் அவர்கள் பணியாற்றும் சமுதாயங்களின் வாழ்க்கை யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பரிந்துரைகளைப் புரிந்துகொள்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றுக்குக் குரல் கொடுப்பதற்கும் *2022* ஏப்ரலில் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டாகும்

உங்கள் கருத்துக்களைத் தயவுசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்
*feministcollectiveforjustice@gmail.com*

***06 .09. 2024***